**MCOP No. 32/2020**

**Date:23.09.2024**

**ம.சா.1 முத்துக்குமார்**

**எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 5ம் வகுப்பு வரைபடித்துள்ளேன். விபத்து சமயம் இருசக்கர வாகனம் ஓட்டும் போது தலைக்கவசம் அணிந்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி தலைக்கவசம் அணிந்திருந்தால் தலையில் காயம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். தலைக்கவசம் அணிய வேண்டும் என்ற விதிமுறை தெரியும் என்றால் எனக்கு தெரியும். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நானே பங்களிப்பு ஏற்படுத்தி இருப்பதால் எனது பங்களிப்பிற்கு ஏற்ப நஷ்ட ஈடு தொகை குறைக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. உங்களது வருமானம் ரூ.30 ஆயிரம் பெற்றதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் பரோட்டா மாஸ்டர் என்பதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் பொதுவாக இலவச சிகிச்சை அளிக்கப்படும் என்றால் சரிதான். நீங்கள் 10 நாட்கள் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளீர்கள் என்றால் சரிதான். தனியார் மருத்துவமனையில் நீங்கள் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். போக்குரவத்திற்கான குறிப்பிடப்பட்டுள்ள பில்கள், வவுச்சர்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சிகிச்சையின் போது கூடுதல் உணவு சாப்பிட்டதற்கான ஆவணம் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் சிகிச்சையில் இருக்கும் போது உங்கள் உடன் இருந்தவர்கள் பற்றிய விவரங்கள் கொடுக்கவில்லை என்றால் சரிதான். உங்களுக்கு ஏற்பட்ட காயங்கள் தற்போது குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. உங்களுக்கு நிரந்தர ஊனமோ, பகுதி ஊனமோ எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தற்போது எந்த வேலையும் நான் செய்யவில்லை. எனக்கு எவ்வித வருமானமும் தற்போது இல்லை.

விபத்தினால் எனக்கு எவ்வித வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் எந்தவித மருத்துவ ஆவணம் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு மற்றும் வட்டிவிகிதம் அதிகப்படியானது என்றால் சரியல்ல. எதிர்மனுதார் எவ்வித நஷ்டஈடும் கொடுக்க கடமைப்பட்டவர்கிடையாது என்றாலும் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

**ம.வி இல்லை.**